SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA TAMIL NADU

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு. R.சந்தோஷ்குமார், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத்(எம்.2)துறை**

**அரசாணை (3D) எண்.15** **நாள் 16.08.2022**

**சுபகிருது, ஆடி-31**

**திருவள்ளுவர் ஆண்டு – 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.32588/கே2/2020, நாள் 06.12.2021.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.32588/கே2/2020, நாள் 04.05.2022.

*******

**ஆணை:**

பதிவுத்துறையில், வேலூர் பதிவு மாவட்டம், திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த போது, பணிக்காலத்தினிடையே 26.06.2019 அன்று காலமான திரு.வே.ராஜேந்திரபாபு என்பவரின் மனைவி திருமதி. R.கிரிஜா தமது மகன் திரு.R.சந்தோஷ்குமார், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 29.10.2020-ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு. R.சந்தோஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு. R.சந்தோஷ்குமார், 09.12.2021 முற்பகல் முதல் தென்சென்னை பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து

தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.R.சந்தோஷ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறைத்தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி சுவர்ந்தாய்வு செய்து, தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், தென்சென்னை பதிவு மாவட்டத்தில், மேலே 2-ல் படிக்கப்பட்ட நடவடிக்கையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.R.சந்தோஷ்குமார், என்பவருக்கு 09.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.14400/ட்டி1/2022, நாள் 29.07.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2900342/ஜி1/2022, நாள் 06.08.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.
திரு.ஆர்.சந்தோஷ்குமார், இளநிலை உதவியாளர்,
தென்சென்னை பதிவுமாவட்டம்.
(பதிவுத்துறைத் தலைவர் வழியாக)

**நகல்:**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.